## மெட்ரோ ரயில் திட்டம் உள்பட எந்தத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை!

# தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை வழங்கிட ஒன்றிய அரசு முன்வர வேண்டும்!

## மாநிலங்களவையில் சு.கல்யாணசுந்தரம் பேச்சு!



புதுடெல்லி, ஆக. 2- மாநிலங்களவையில் 29.07.2024 அன்று சு.கல்யாணசுந்தரம் ஆற்றிய உரை வருமாறு:

மாநிலங்களவை உறுப்பினராக என்னை நியமித்து மூன்றாவது ஆண்டாக ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை மீது உரையாற்றும் அருமையான வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயகர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.... என்று

உலகப் பொதுமறையாய் போற்றப்படும் திருக்குறள் உழவுத் தொழில் செய்யும் வேளாண் குடியினர் பெருமையை போற்றுகிறது.

**விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு!**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான சிற்பி தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளின் துயர் துடைக்க இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக 1990 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பை வழங்கினார். அதனை எங்கள் முதல்வர் திராவிட நாயகர் இன்று வரை நடைமுறைப்படுத்தி வருகிறார். இத்திட்டத்தை இந்தியா முழுவதற்கும் ஒன்றிய அரசு செயல்படுத்தி விவசாயிகளின் முன்னேற்றத்தை உறுதி செய்திட வேண்டும்.

**‘உதய்’ திட்டத்தால் நிதி சுமை!**

உஜய் திட்டத்தினால் தமிழக அரசிற்கு நிதி சுமை அதிகரித்து வருகிறது. ஒன்றிய அரசு நாடு முழுவதும் விரிவுபடுத்தி இலவச மின் திட்டத்தை ஏற்று நடத்திட வேண்டும்.

நிதி என்றதும் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒன்றிய அரசு எங்கள் தமிழ்நாட்டிற்கு கடந்த 10 ஆண்டுகளில் எந்த ஒரு திட்டத்தையும் அனுமதிக்கவுமில்லை. நிறைவேற்ற வும்மில்லை. தேர்தல் நேரங்களில் அளிக்கப்பட்ட எந்த ஒரு வாக்குறுதியையும் நிறைவேற்றவும் இல்லை.

குறிப்பாக மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை 2015ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது. 2024 நாடாளுமன்ற தேர்தல் வரை அடிக்கல்லோடு நின்று விட்டது. அதன் பிறகு கட்டப்படுவதாக கூறப்படுகிறது. அந்த மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை கட்டுவதில் அளவுக்கு மீறிய காலதாமதம் செய்கிறது ஒன்றிய அரசு. விரைந்து முடித்திட வேண்டுகிறேன்.

சென்னை மாநகர மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு ஒன்றிய அரசின் பங்குத்தொகை 50% சதவிகிதத் தொகையை அளித்திட வில்லை. தமிழ்நாடு அரசு மட்டும் 60 ஆயிரம் கோடி ரூபாய் செலவளித்துள்ளது. நடப்பாண்டில் மேலும் 12 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இந்நிலையில் ஒன்றிய அரசு நிதி வழங்காததால் மாநில அரசுக்கு பெரும் நிதிச்சுமை ஏற்படுகிறது. மக்களுக்கு சிரமங்களும் அதிகரிக்கின்றன.

ஒன்றிய அரசு இந்த நிதி நிலை அறிக்கையிலும் மெட்ரோ ரயில் திட்டம் உட்பட தமிழ்நாட்டிற்கு எந்த ஒரு திட்டத்திற்கும் நிதி ஒதுக்கிடவில்லை. தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசின் மீது அதிருப்தி நிலவுகிறது. இதை கருத்தில்கொண்டு தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை வழங்கிட வேண்டுகிறேன்.

வெள்ளச் சேதம் நிதி வழங்கப்படவில்லை!

கடந்த டிசம்பர் மாதத்தில் மிக்ஜாம் புயலால் சென்னை பகுதியில் நான்கு மாவட்டங்களிலும் தூத்துக்குடி, நெல்லை உட்பட நான்கு மாவட்டங்களிலும் வரலாறு காணாத மழை பெய்து மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டது. முதல்வர் அவர்கள் பிரதமரிடம் கேட்டுக் கொண்டும் நிதி வழங்கப்படவில்லை.

இந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டு மக்களுக்கு, வெள்ளச்சேதங்களுக்கு நிதி வரும் என ஆவலோடு எதிர்பார்த்தோம். ஏமாற்றம் தான் எங்களுக்கு கிடைத்துள்ளது. எனவே, ஒன்றிய அரசு இனியாவது பரிசீலனை செய்து தமிழ்நாட்டு மக்களுக்கு உதவிட வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

விக்கிரவாண்டி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை

விக்கிரவாண்டி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை 2005ஆம் ஆண்டில் கடும் மழை பெய்து சாலைகளெல்லாம் சிதைந்து விட்டன. அந்த நேரத்தில் சேதமடைந்த இடங்களை பார்வையிடவும், பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறவும், அன்றைய எதிர்கட்சி தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சாலை வழியாக வந்தபோது கடலூர் மாவட்ட பகுதிகளை கடக்க முடியாமல் சாலைகள் சேதமடைந்திருந்ததை கண்டு வருந்தினார்கள். அப்போது ஒன்றியத்தில் திராவிட முன்னேறக்கழகம் பங்குபெற்றிருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அமைந்திருந்தது. அந்த அரசின் தரைவழி போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தவர் T.R.பாலு அவர்களிடம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்லி விக்கிரவாண்டி - தஞ்சாவூர் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றச்சொல்கிறேன் என்றார். அதன்படி 2005ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டது. உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து விக்கிரவாண்டி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையை தரம் உயர்த்திட ஆணையிடப்பட்டது. அந்த சாலையின் பணி இதுவரை நிறைவேராமல் ஆமை வேகத்தில் நடைபெற்று வருகிறது. எனவே, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் தேங்கி கிடக்கும் இந்த விக்கிரவாண்டி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைவாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**சேமிப்புக் கிடங்குகள் ஏற்படுத்துவீர்!**

உணவு தானியங்கள் வீணாகாமல் இருக்க ரயில் நிலையங்களில் போதுமான இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் ஏற்படுத்த வேண்டும்.

உற்பத்தியாகும் உணவு தானியங்களை விரைவாக உணவுப்பொருள் சேமிப்பு இடங்களில் சேமித்திட வகை செய்திட வேண்டும். மேலும் தஞ்சாவூர் - விழுப்புரம் ரயில் பாதையை இருவழிப் பாதைகளாக உயர்த்திட ஒன்றிய அரசு விரைந்து அனுமதி வழங்கிட வேண்டும்.

கும்பகோணத்தில் உள்ள ரயில்வே குட்ஷெட்கான இடம் போதுமானதாக இல்லாததாலும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாலும் திருநாகேஸ்வரத்தில் போதுமான இடம் இருப்பதால் பெரிய கிட்டங்கி வசதியுடன் குட்ஷெட் அமைத்து தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட வேளாண் பொருட்கள் மற்றும் அழிந்த வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு ஒன்றிய அரசு உரிய இழப்பீடு வழங்கிட வேண்டும்.

**ஜி.எஸ்.டி வரியை நீக்குக!**

வேளாண் இயந்திரங்களுக்கு ஜி.எஸ்.டி. வரியை நீக்க வேண்டும். சிறிய விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் குறைந்த விலையில் கிடைத்தால் விவசாய உற்பத்தி பெருகிட வழிபிறக்கும். இதனை கருத்தில் கொண்டு வேளாண் இயந்திரங்களுக்கு வரிவிலக்கு அளித்திட வேண்டுமென காவேரி, டெல்டா விவசாயி என்ற முறையில் ஒன்றிய அரசை மாண்புமி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் செய்யும் நேரங்கள் தவிர கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணை தொழில்கள் மூலம் விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்கிக்கொள்ள உதவிடும் திட்டங்களை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்த வேண்டும்.

உற்பத்தி செய்யப்படும் தானியங்களைச் சேமிக்கவும், இயற்கை பேரிடர்களில் இருந்து காப்பாற்றவும், போதிய சேமிப்பு கிடங்குகள் தேவைப்படுகின்றது. குறிப்பாக வெங்காயத்தை சேமிக்க மற்றும் வீணாகாமல் பாதுகாக்க அதற்குரிய சிறப்பு சேமிப்பு கிடங்கிகளை பெரம்பலூர், நாமக்கல் போன்ற வெங்காயம் உற்பத்தியாகும் மாவட்டங்களில் உருவாக்க வேண்டும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் 100 நாள் வேலை செய்து வரும் பயனாளிகளுக்கு 150 நாள் வேலை கிடைக்க உறுதி செய்ய வேண்டும். அது போல் விவசாயத் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைக்குச் செல்வதால் சிறு குறு விவசாயிகள், விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காமல் சிரமப்பட வேண்டியுள்ளது. அதனால் உற்பத்தியும் குறைகிறது. எனவே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைக்கு செல்பவர்களை விவசாய பணிக்கும் பயன்படுத்திக்கொள்ளளாம் என உத்தரவு பிறப்பித்தால் அவர்களுக்கு கூடுதலாக வேலை கிடைப்பதுடன் விவசாயிகளும் பயனடைவர். விவசாய வேலைகளும் தடையின்றி நடைபெறும். இதனால் உற்பத்தியும் பெருகும்.

**உற்பத்தியை பெருக்கிட வழிவகை செய்க!**

இந்த வருடத்தை சிறு தானியங்கள் வருடம் எனக்கொண்டாடும் ஒன்றிய அரசு சிறுதானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலனுக்கான திட்டங்களையும், பலன்களையும் விவசாயிகள் பெற்றிடவும், உற்பத்தியை பெருக்கிடவும் வழிவகை செய்ய வேண்டும்.

நெல் பயிர்களுக்கு மாற்றுப் பயிர்களாக சோயா மற்றும் சிறுதானியங்கள் போன்ற பயிர்களை பயிர் செய்திட விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் ஒன்றிய அரசு சிறப்பு திட்டங்களை நடைமுறை படுத்திட வேண்டும்.

தென் மாநிலங்களில் தென்னை விவசாயம் அதிகம் மேற்கொள்ளப்படுகிறது. அதன் மூலம் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகள் உரிய விலை கிடைக்காமல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தேங்காயை மூலப் பொருளாகக் கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்து சந்தைப்படுத்துவதற்கான கொள்கை முடிவு எடுக்க வேண்டும். பொது விநியோகத் திட்டத்தில் தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் விற்பதை கட்டாயம் ஆக்கிட வேண்டும். அதற்கான உணவுப் பொருள் மானியத்தை மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு வழங்கி நடைமுறைப்படுத்த முன் வர வேண்டும்.

இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**அரிசிக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பை கை விடுக!**

அரிசிக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பதை கைவிட வேண்டும். உணவு பாதுகாப்பு சட்டப்படி உணவுபொருட்களை பாக்கெட்டில் அடைத்து தான் விற்பனை செய்ய வேண்டும் என்கிற கட்டாயம் உள்ளபோது, பாக்கெட்டில் அடைக்கப்படுகிற அரிசிக்கு ஜி.எஸ். டி. வரி விதிப்பது ஏற்கத்தக்கது அல்ல.

மண் வளத்தையும் பாழாக்கி, உணவு பொருட்கள் முழுமையும் நஞ்சாகும் வகையில் தயாரிக்கப்படும் கட்டுக்கடங்காத பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் களைக்கொல்லி மருந்துகள் தயாரிப்பிற்கும், அவற்றின் பயன்பாட்டிற்கும் தடை விதிக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா முழுமையிலும் காரிப், ரபி பருவம் என்கிற இருபருவ காலங்களையும் கணக்கில் கொண்டு காப்பீடு திட்டத்தைச் செயல்படுத்துவது பொருத்தமாக இல்லை. தமிழ்நாட்டிற்கென தனி காப்பீடு திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை ஒன்றிய அரசு உடனடியாக உருவாக்க முன்வர வேண்டும்.

**காப்பீடு செய்ய கொள்கை திட்டம்!**

காப்பீட்டு திட்டத்தில் தனியாரை மத்திய அரசு அனுமதித்ததால் வணிக நோக்கோடு செயல்படும் நிலை ஏற்படுகிறது. இதனால் மத்திய மாநில அரசுகள் வழங்கும் நிதி பாதிப்புக்கு ஏற்பவிவசாயிகளுக்கு சென்றடைவதில் பின்னடைவு நீடிக்கிறது. எனவே ஒன்றிய அரசின் வேளாண் காப்பீடு திட்டத்தின் மூலம் மட்டுமே காப்பீடு செய்யப்படுவதற்கு மீண்டும் கொள்கை திட்டத்தை ஒன்றிய அரசு உருவாக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

அனைத்து விவசாயிகளுக்கும் ஒன்றிய அரசு இலவசமாக பயிர் காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

காப்பீட்டு திட்டத்தில் மத்திய மாநில அரசுகள் தலா 49 சதவீதம் ப்ரீமியத்திற்கான பங்கு தொகையை செலுத்தி வந்தது. தற்போது ஒன்றிய அரசு 25 சதவீதமாக தனது பங்கீட்டை குறைத்துக் கொண்டு விட்டது. இதனை ஈடு செய்ய மாநில அரசுகளே நிதிச் சுமையை ஏற்க வேண்டிய நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும்.கடந்த காலம் போலவே 49 சதவீதத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கு ஒன்றிய அரசு உடனடியாக முன் வர வேண்டும்.

நீர்நிலை மேலாண்மை மூலமாக குளங்கள் மற்றும் ஏரிகளைத் தேசிய அளவில் அடையாளப்படுத்தி அவற்றை உடனடியாகத் தூர்வாரி நீர்நிலை சேமிப்பு இடமாக மட்டுமல்லாமல் நிலத்தடி நீரினையும் உயர்த்திட வழிவகை செய்திட வேண்டும்.

**சிறப்பு திட்டங்கள் எதுவும் இல்லை!**

கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு என்பது விவசாயத்தின் ஒரு அங்கமாக இருக்கிறது இதனை ஊக்கவிக்க சிறப்பு திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை; இது எங்கள் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்திய விவசாயிகளுக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது என்பதை அவையின் கவனத்திற்கு கனிவோடு கொண்டுவருகிறேன்.

ஆழ்கடல் பகுதிகளுக்குச் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் பிடிக்கும் மீன்களை கெடாமல் கரைக்கு கொண்டு வந்து சேர்க்க புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய குளிர்சாதன வசதிகள் கொண்ட மீன்பிடி படகுகளை மீனவர்களுக்கு மான்யத்தில் வழங்கிட ஒன்றிய அரசு திட்டங்கள் வகுத்திட வேண்டும்.

ஆறு, குளங்கள் சார்ந்த உள்நாட்டு மீன்பிடி மீனவர்களுக்கு சிறப்பு திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

கடலில் மீன் பிடி தொழில் செய்யும் மீனவர்களும் விவசாயிகளை போன்றவர்களே. அவர்களுக்கு போதிய உயிர் பாதுகாப்புக்கு வழி செய்ய வேண்டும். இயற்கை மற்றும் இதர பேரிடர்களினால் பாதிக்கப்படுகின்ற மீனவர்களுக்கு உரிய இழப்பீடு உடனுக்குடன் கிடைத்திட ஒன்றிய அரசு வழிவகை செய்திட வேண்டும். இந்திய கடல் எல்லையை தாண்டி மீன்பிடிக்கும் மீனவர்களை எல்லை தாண்டாமல் வழிநடத்தக் கூடிய அதிநவீன ஜிபிஎஸ் கருவிகளை இலவசமாக மீனவர்களுக்கு ஒன்றிய அரசு வழங்கிட வேண்டும்.

**மீனவர்கள் கைது கொடுமைகளை தடுத்திடுக!**

தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை அரசு அடிக்கடி கைது செய்து அவர்களின் படகுகளை பறிமுதல் செய்யும் கொடுமைகளை ஒன்றிய அரசு தடுக்க வேண்டும். இப்போது கூட கைதாகி இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராமநாதபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்களை சார்ந்துள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்திடவும், அதுபோல் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள விசைப் படகுகள் மற்றும் நாட்டுப்படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதுடன், தற்போது மீட்டுக்கொடுக்க முடியாத படகுகளுக்கு போதுமான உரிய நிதியை நிவாரணமாக ஒன்றிய அரசு வழங்கிட வேண்டும்.

**காவிரிப் பிரச்சினை: வேடிக்கை பார்க்கக் கூடாது!**

தமிழ்நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை மிக மோசமான நிலையில் உள்ளது குடிதண்ணீருக்கு பரிதவிக்கும் நிலையும் ஏற்படுகிறது. எனவே காவிரி நீர் பிரச்சனை தொடர்ந்து நீடிப்பதை ஒன்றிய அரசு வேடிக்கை பார்க்க கூடாது. காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை கர்நாடக அரசு நிறைவேற்றும் பொறுப்பை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும்.

தென் மாநிலங்களில் நீர்ப்பாசன பிரச்சனைகளால் விவசாய உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மிகப் பெரும் உணவு தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உள்ளது என்பதை உணர்ந்து தமிழ்நாட்டின் நீர்ப்பாசன பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வு காண உதவிட வேண்டும்.

**சட்ட விரோதமாக அணைகள்! தடுத்து நிறுத்துக!**

பாலாற்றின் குறுக்கே ஆந்திரா அரசு தொடர்ந்து சட்டவிரோதமாக அணைகளை கட்டி தமிழ்நாடு நோக்கி வரும் நீரை தடுப்பதால் சென்னை மண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது. நிலத்தடி நீர் பறிபோகும் நிலை உள்ளது. இதனை ஒன்றிய அரசு நேரில் தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும்.

**மிகப் பெரும் உணவு தட்டுப்பாடு ஏற்படும்!**

தென்னிந்தியாவில் பருவநிலை மாற்றத்தால் அரிசி உற்பத்தி குறைந்து வருவது அதிர்ச்சி அளிக்கிறது. இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் அரிசியையே உணவாக உட்கொண்டு வரும் நிலையில், எதிர்காலத்தில் மிகப்பெரும் உணவு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது. தென் மாநிலங்களில் நெல் கொள்முதலில் காரிப் ரபி பருவ கொள்முதல் முறை என்பது தமிழ்நாட்டின் பருவ காலத்திற்கு ஏற்றதாக இல்லை.

தமிழ்நாட்டு பருவ நிலைக்கு ஏற்ப கொள்முதல் கொள்கையை உருவாக்கி ஒன்றிய அரசே முழு பொறுப்பேற்று கொள்முதல் செய்வதை உறுதிப்படுத்த முன் வர வேண்டும்.

குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணய சட்டத்தை கொண்டு வந்து வேளாண் உற்பத்தி பொருளுக்கு லாபகரமான விலை கிடைப்பதை உத்திரவாதப்படுத்திட வேண்டும். எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையை முழுமையாக நிறைவேற்றிட ஒன்றிய அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

**கல்விக் கடன் வசூல் தடுத்திடுக!**

கல்விக் கடன் பெற்று படிக்கவைத்தவிவசாயிகள் வேலை வாய்ப்பு இல்லாமலும் பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியாமலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கல்வி கடன் வசூல் என்கிற பெயரில் கார்ப்பரேட் நிறுவனங்களை வசூல் முகவர்களாக நியமித்து கட்டாய வசூல் செய்வதோடு, மிரட்டி அச்சுறுத்தி வருகிறார்கள். இதனை தடுத்து நிறுத்த ஒன்றிய அரசு முன்வர வேண்டும். கல்விக் கடன் வேளாண் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டு என வலியுறுத்துகிறேன்.

நிதியமைச்சர் தமிழ்நாட்டிற்கு தாராளமாக நிதி உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு கூடுதல் நிதி வழங்கிட வேண்டியும் வாய்ப்புகளுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு சு.கல்யாணசுந்தரம் எம்.பி. பேசினார்.



தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி நீலகிரி முனிசிபல் காலனி மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி, 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு சீருடை, விலையில்லா மிதிவண்டிகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.



கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., சிங்காநல்லூர் பகுதி1 தி.மு.க. சார்பில், எஸ்.ஐ.எச்.எஸ்.காலனி ஏ.ஆர்.எஸ். மகாலில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், திமுக இந்தியா கூட்டணி 40/40 மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் கோவை நாடாளுமன்றத் தேர்தலில் திமுக இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்ட கணபதி ராஜ்குமார் எம்பி., மாபெரும் வெற்றி பெற்றதை முன்னிட்டு வெற்றிக்குப் பாடுபட்ட தி.மு.க. நிர்வாகிகள், கழகத் தொண்டர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு. சிங்காநல்லூர் பகுதி1 திமுக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் அனைவரையும் வாழ்த்தி, சிறப்புரையாற்றி கழக நிர்வாகிகள்,BLA2 பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கு வெற்றிப் பரிசுகளை வழங்கினார் இந்நிகழ்வில், கணபதி ராஜ்குமார் எம்.பி., எஸ்.எம்.சாமி, ஆடிட்டர் சசிகுமார், Dr. பிரதீப்குமார், கஸ்தூரி அருண் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்,கொளக்காநத்தம் கிராமத்தில் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் கிளைக் கழக செயலாளர் என். ராகவன் வரவேற்புரையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய குழு தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வீ. ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடாவும், மாநில வர்த்தக அணி துணை தலைவருமான கோவி.செழியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத், ந. ஜெகதீஸ்வரன், எம்.ராஜ்குமார், தி. மதியழகன், சி.ராஜேந்திரன், க. ராமலிங்கம், து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், டி.ஆர்.சிவசங்கர், மா.பிரபாகரன், அ.அப்துல் கரீம், தங்க.கமல் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகத்தில் (Solid Waste Management System) SWMS மூலம் மாநகராட்சி தூய்மை பணிகளுக்காக குப்பை சேகரிக்கும் வாகனங்கள் மற்றும் கருவிகளை திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், துணை ஆணையாளர் சுல்தானா, 2ம் மண்டலத்தலைவர் தம்பி ர.கோவிந்தராஜ், சுகாதாரக் குழு தலைவர் கவிதா நேதாஜிகண்ணன், வடக்கு மாநகர பொருளாளர் அ.சரவணகுமார் உட்பட பலர் உள்ளனர்.